2025 – ஜனவரி மாதம் 30– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 23 / 2023*

*2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 30– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 2 , வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 2, ஸ்ரீதரன் |
| தகப்பனார் பெயர் | : | மனோகரன் |
| ஊர் | : | சென்னை |
| வட்டம் | : | சென்னை |
| மாவட்டம் | : | சென்னை |
| தொழில் | : | சட்ட மேலாளர் |
| வயது | : | 38 |

**தேதி: 30.01.2025.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது 2–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை 2–ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டுகின்றேன்.

**எனது சார்பாக :–**

**1.** TN 46 Z 7670 என்ற வாகனத்திற்குரிய பாலிசி நகல் நிபந்தனைகளுடன் கூடியது **எ.சா.ஆ.5.**

2.1–ம் எதிர்மனுதாரருக்கும் 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கும்வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு ஜெராக்ஸ் நகல் 2 அஞ்சல் ரசீதுகளின் ஜெராக்ஸ் சேர்ந்து **எ.சா.ஆ.6.**

3. மேற்படி வழக்கறிஞரின் அறிவிப்பை 1–ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டதை காட்டக்கூடிய அஞ்சலக ஒப்புதல் அட்டையின் ஜெராக்ஸ் நகல் **எ.சா.ஆ.7.**

மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கின்றேன்.

<u>குறுக்கு விசாரணை:– (மனுதாரர் தரப்பில்)</u>

நான் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ.6 பாலிசி பேக்கேஜ் பாலிசி என்றால் ஒரு வருடம் பேக்கேஜ் பாலிசி மீதி 4 வருடங்கள் 3–ம் நபருக்கான காப்பீடு. இந்த மனுவின் மனுதாரர் எங்கள் நிறுவனத்தை பொறுத்தவரை 3–ம் தரப்பினர் என்றால் சரிதான். 3–ம் தரப்பினருக்கு எங்கள் நிறுவனமே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் காப்பீடு விதிமீறல் இல்லை என்றால் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது. காப்பீடு விதிமீறல் என்பது எங்கள் நிறுவனத்திற்கும் வாகன உரிமையாளர் 1–ம் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்த மீறல் என்றால் சரிதான். எங்கள் காப்பீட்டு ஒப்பந்தம் 3–ம் நபரை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். நாங்கள் 1–ம் எதிர்மனுதாரருக்கு பாலிசி கொடுக்கும் போது பாலிசி நிபந்தனைகளையும் சேர்த்து கொடுத்தோமா என்றால் பாலிசி கொடுக்கும் போது பாலிசி நிபந்தனைகளை படித்து பார்த்த பின்னரே பாலிசியில் கையொப்பம் செய்கிறார்கள். எ.சா.ஆ.6 ஆவணம் எங்கள் நிறுவனத்தால் நேரடியாக வழங்கப்பட்டதா அல்லது ஏஜெண்ட் மூலமாக வழங்கப்பட்டதா என்றால் எங்கள் நிறுவனத்தின் ஒப்புதல் பெற்று ஏஜெண்ட் மூலமாக வழங்கப்பட்டதாகும். இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யக்கேட்டு எ.சா.ஆ.7 அறிவிப்பு அனுப்பப்பட்டது. அந்த அறிவிப்பிற்கு பின்னரும் அவர் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை. 1–ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மனோஜ் என்பவருக்கு நாங்கள் அனுப்பிய எ.சா.ஆ.7 அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை

இருந்து வரவில்லை என்றால் சரிதான். அவருக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா இல்லையா என்பது குறித்து எங்கள் நிறுவன புலன் ஆய்வு அதிகாரி நேரடியாக விசாரணை செய்து ஆவணம் தாக்கல் செய்துள்ளாரா என்றால் புலன்ஆய்வு அதிகாரி விசாரணை செய்து ஓட்டுநர் உரிமம் இல்லை என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த அறிக்கையில் ஓட்டுநரிடம் ஓட்டுநர் உரிமம் இல்லாதது குறித்து ஏதேனும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. வாகன ஓட்டுநர் ஒரு முகவரியிலும் 1–ம் எதிர்மனுதாரரான வாகன உரிமையாளர் ஒரு முகவரியிலும் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் வாகன ஓட்டுநருக்கு இருந்து வருகிறாதா இல்லையா என்பது குறித்து 1–ம் எதிர்மனுதாரர் சரியான தகவலை சொல்ல முடியாது என்றும் 1–ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையாக தகவல் தெரிவிக்கவில்லை என்றும் 1–ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று உறுதியாக கூறமுடியாது என்றும் சொன்னால் சரியல்ல. எ.சா.ஆ.7 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்னரும் 1–ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பிக்கவில்லை. விபத்தில் காயமடைந்த நபர் 3–ம் நபர் என்பதால் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என சொன்னால் காப்பீடு விதிமீறல் இல்லை என்றால் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது. 3–ம் நபர் நேரடியாக பாதிக்கப்படும்போது ஒப்பந்தமே இல்லாத 1–ம் எதிர்மனுதாரர் நேரடியாக இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரரின் ஒப்புதலின் அடிப்படையிலேயே வாகனத்தின் ஓட்டுநர், ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டியதால் 1–ம் எதிர்மனுதாரரே கொடுக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

<u>மறு விசாரணை:– இல்லை.</u>

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**